# அரண்


பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)

ISSN: 2582-399X




காலாண்டு இதழ்

(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)

ஆகிய மாதங்களில் வெளிவரும்


*Vol:7 Issue :26 April 2025*

கோட்டை:7 வாயில்:26 ஏப்ரல் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005,
Uttar Pradesh,India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD


**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil, Chennai-600100

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்


தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரின் பிற உரை நுட்பங்கள்
முனைவர்.வி.சேகர்

தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில் பாட வேறுபாடுகள்
கு.செந்தமிழ்செல்வி

எட்டுத்தொகை - 'குறுந்தொகை'யில் சொலவழுங்கல்
ஆ.கவிதா

சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு
மா.மகேஸ்வரி

சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு
ப. நந்தினி

களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்
திருமதி.கோ.சரண்யா

புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறை உணா ்த்தும் போர்
ப.சிவாஜி

பதினெண்கீழ்க்கணக்கு 'திரிகடுகத்தில் கல்விச் சிந்தனைகள்
இரா.தீபலெட்சுமி

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் 'திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி
இரா.ஹேமலதா

சிலம்பில் அரசியல்
மு.உமாமகேஸ்வரி


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்**
**முனைவர் ச.வைத்தீஸ்வரன்**

**திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்**
**முனைவர் ஹ.விஜயலட்சுமி**

**பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்**
**ப.பிரபு**

**திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்**
**சா.ஜனார்த்தனன்**

**சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்**
**திருமதி நா.நித்யா**

**நடன குஞ்சிதபாதம் எழுதிய மதுரைக் கதம்பத்தில் காணலாகும் உத்திகள்**
**கி. ராஜ்குமார்**

**தர்காவும் விளிம்புநிலை மக்களும்**
**முனைவர் மௌ.அஸ்கர் அலி**

**இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்**
**முனைவர் நா. ஜிதேந்திரன்**

**சங்கதி புதினத்தில் பெண் பாத்திரப்படைப்புகள் ஓர் ஆய்வு**
**ரா.சந்தியா**

**ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'மணவிழவுச் சடங்குகள்'**
**ரா.ஹேமா சிவகா**

**கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்**
**இரா.கலாவதி**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்


**இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்**
ந.மஞ்சுளா

**மகாபரதச்சூடாமணியில் கைச் செயற்பாடுகள்**
பத்மினி. S

**EASY LEARNING TECHNIQUES**
PROF. Dr. Er. S. HARI PRASAD

**Exploring the Lesson planning process of Teachers Teaching Mathematics in Grade 9 In Batticaloa District Schools**
Kanapathipillai Gnanaretnam

**A Comparative Study Of Formal And Non-formal Education Systems**
Shiyani Thevaruban

**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**
முனைவர் வி. ஜெயஸ்ரீ பிரியதர்ஷினி[1], எல். பஷீரா பேகம்[2]

**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**

**The Architecture of Thirunallūr Kalyānasundharēswarar Attic (Māda) Temple in Thiruvarur District, Tamil Nadu**
P.PRAVEENKUMAR

**Educational and Intervention, Impact a case study on Nilgiris and Chennai Slums**
Dr. S.Udhaya Kumar.

**தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்**
முனைவர் செ. சாந்தி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு

**கட்டுரையாளர்**
***மா.மகேஸ்வரி***
*முனைவர்பட்ட ஆய்வாளர்(முழுநேரம்)*
*முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை*
*கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை.*
*இணைவு திருவள்ளுர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் — **632115.***

**நெறியாளர்**
*முனைவர் கோ. சாந்தமூர்த்தி*
*இணைப்பேராசிரியர்*
*முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை*
*கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி*
*திருவண்ணாமலை **606603.***

**ஆய்வுச்சுருக்கம்:**

*சங்க இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பழைமை உடையன. சங்க பாடல்கள் அணைத்தும் அகம், புறம் என்ற திணையைப் பற்றியது இதனால் இவ்விலக்கியத்தை திணை இலக்கியம் என்று அழைக்கப்படுகிறது. இவ்விலக்கியம் எட்டுத்தொகைப் பத்துப்பாட்டு என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விலக்கியங்கள் தமிழர்களின் பழமையான பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை புரிந்துக்கொள்வதற்கு பெரிதும் துணைப்புரிகின்றன. சங்க கால மக்கள் வாழ்க்கை முறையினை அகவாழ்வு என்றும் , புறவாழ்வு என்றும் இரண்டாகப் பகுத்து வாழ்ந்தனர். அகவாழ்வினை களவு, கற்பு என்றும் புறவாழ்வினை வீரம், கொடை, போர் என்று பகுத்தனர். பதினெண்மேற்கணக்கு நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகும். இவ்விலக்கிய அகநூல்களில் உள்ள உடன்போக்கு பாடல்களை மட்டுமே எடுத்துக்கொண்டு ஆராயும் நோக்கில் இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.*

**திறவு** *சொற்**கள்**:உடன்போக்கு — சங்க இலக்கியம் — அக இலக்கண மரபுகள் — பெண் மாந்தர் களவு வாழ்க்கை - களவு.*

***Abstarct:***

*Sangam literature has been ancient two thousand years old. Sangam songs are about the inner and outskirts of the inner, which is called the literature of the literature. This literature is classified as an eight -tenth. These books are greatly accompanied by understanding the old culture and civilization of the Tamils. The people of Sangam lived the lifestyles of the people as agitations and outsourcing. They divided the theft, the chastity, the heroism, the gift, the war. Eighty -eight texts are eight, ten. This review is aimed at taking and examining only the agreements in these books.*

***Keywords;****udanpokku, sangkailakiyam, agaillakkanamarabu ,penpaanthar kalavu vazhkai, kalavu.*

**முன்னுரை:**

*சங்க இலக்கியத்தை திணை இலக்கியம் என்று கூறுவர். காலத்தால் முற்பட்ட இலக்கியமாகும். சங்க இலக்கியம் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட வரை **473** புலவர்களால்*

எழுதப்பட்ட **2831** பாடல்களை கொண்டுள்ளது. இக்காலகட்டத்தில் வாழ்ந்த புலவர்கள், மன்னர்கள், பெணபாற் புலவர்கள் என அனைவராலும் எழுதப்பெற்றன. பண்டைய தமிழரது போர், வீரம், காதல், ஆட்சிமுறை, வணிகம், நகர அமைப்பு, குடிமக்களின் வாழ்க்கைமுறை போன்றவை சங்க இலக்கிய பாடல்கள் மூலம் அறிய முடியகிறது. **19** நூற்றாண்டில் வாழ்ந்த தமிழர் அறிஞர்களான சி.வை.தாமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாதய்யர் ஆகியோரின் முயற்சியால் சங்க இலக்கியகள் அச்சுருப் பெற்றன. அவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களாகும். இதனை பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்று அழைப்பர். பழங்கால மக்களின் வாழ்வியலை தௌ;ளத் தெளிவாக பகுத்து வாழ்ந்தனர் இவர்களுடைய இயற்கை சூழல், விலங்குகளின் அன்புணர்வு, பறவையின் காதல் உணர்வு போன்ற செய்திகளும் இடம்பெறுகிறது.

சங்க இலக்கிய அகப்பாடல்களில் உடன்போக்கு பாடல்களை தலைவன், தலைவி, செவிலி, தோழி, நற்றாய், கண்டோர் போன்றோர்களின் கூற்றுகள் மூலமாக விரிவாக்கப்படுகின்றன. சங்க நூல்களின் தொன்மையும், அதன் சிறப்புக்கூறுகளையும் நன்கு அறியமுடிகிறது. சங்க இலக்கிய மங்களின் வாழ்வியலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற திணை அடிப்படையில் பாகுபாடு செய்து வாழ்ந்தனர் மற்றும் அவர்கள் சார்ந்த இயற்கை சூழலையும் படம் பிடித்துக் காட்டுவதாக சங்க இலக்கிய அகப்பாடல்கள் காணப்படுகிறது. இவ்வாறாக அமைந்த சங்க இலக்கிய நூல்களில் உடன்போக்குப் பாடல்களை இனிக் காண்போம்.

**உடன்போக்கு**

தலைவனும் தலைவியும் யாரும் அறியாதவாறு களவு வாழ்க்கையில் ஈடுபடுவர். பின்பு அலர் எழுதவற்கு முன்பு தோழியின் உதவியுடன் திருமணம் செய்ய நினைப்பர் ஆனால் பெற்றோர் விருப்பம் தெரிவிக்காதபோது தான் உடன்போக்கு நிகழும். உடன்போக்கு என்பது மனம் ஒத்த தலைவனும், தலைவியும் களவு வாழ்வில் இருந்து கற்பு வாழ்க்கைக்கு நகருதல் முதற் நிகழ்வாகும். உடன்போக்கு என்பது களவு வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள தலைவனும், தலைவியும் சுற்றத்தாருக்கும், வீட்டிற்கும் தெரியாமல் தலைவன் தன் சொந்த ஊருக்கு அல்லது வேறு ஊருக்கோ தலைவியை பாலை நிலத்தின் வழியே கொடிய துன்பம் நிறைந்த பாதையின் வழியே அழைத்துச் செல்வான். காதல் வாழ்க்கையை வீட்டில் மறைத்தபோதுதான் உடன்போக்கு சென்றபின்னர் அதனைத் தெரிந்த நற்றாய், செவிலி, தோழி, கண்டோர் போன்றோர்களின் பேச்சுகள் மற்றும் புலம்பல்கள் இடம்பெறுவதை இதன்மூலம் கானலாம். உடன்போக்கு ஏற்பட சில காரணங்கள்

1. தாயைப் பற்றிய அச்சம்
2. தாயின் ஐயம் பற்றிய உணர்வு
3. மகளைக் காக்கும் தாயின் காவல்
4. தாய் கடிந்துரைத்தலும் அலைத்தலும்
5 அலர் அம்பல்
6. இற்செறிப்பு
7. நொதுமலர் வரைவு
8. வரைவு கெடாமை

இத்தகைய சூழலில் தான் தலைவி உடன்போக்கு செல்வதற்கு காரணமான சூழல்களாகும். தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் மிகவும் விரும்பிக் காதல் கொள்ளும் போது பெற்றோர்களுக்குத் தெரியாமல் தம் சொந்த ஊரை விட்டு வெளியூர் செல்வது உண்டு. அதனை உடன்போக்கு என்பர். தலைவன் தலைவியின்மீது காதல் மலரந்து வளர்ந்த களவு வாழ்க்கை ஊரார்க்குத் தெரியவரும் முன்னரே தோழி அறத்தோடு நிற்பாள். திருமணம் முடிக்க கட்டாயப்படுத்துவாள். அதற்குமாறாக களவு வெளிப்பட்டுவிடும். இச்சூழலில் பலரும் அறிந்து அலர் பேசும் நிலையில் உடன்போக்கு நிகழும்.

அகத்திணை நெறியில் களவு வாழ்க்கை கற்பாக மாறுவதற்கு இரண்டு வழிகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. ஒன்று அறத்தோடு நிற்றல். மற்றொன்று உடன்போக்கு இவற்றுள் ஒன்று நிகழ்ந்தால் மற்றொன்று நிகழாது. இவ்வாறு உடன்போக்கின் பின்னர் அறத்தோடு நிற்பதால் பயன் ஒன்றும் இல்லை இவ்விரண்டில் ஒன்றுதான் களவு நாடகத்தின் வெளிப்படையான காட்சியாக உடன்போக்கு அமைகின்றன.

**உடன் போக்கில் கதை மாந்தர்களின் பங்களிப்பு மற்றும் அதன் வருணனை**

அக இலக்கியத்தில் தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி இவர்களின் பங்களிப்பு முக்கிய இடத்தை வகிக்கிறது. தலைவன் தலைவி உடன் போக்கிற்கு பிறகு செவிலி, நற்றாய் இவர்களுடைய புலம்பல்கள், உணர்வுகள் வெளிப்படுகின்றன. தலைவன், தலைவி தம் ஊரை விட்டு செல்லும் பாதை பாலை திணையை சார்ந்தவை அங்கு காணப்படும் இன்னல்களும் பாலைவனச் சூழல்களும் படம்பிடித்துக் காட்டுகின்றன. தலைவி இருக்கும் இயற்கைச் சூழலும் தலைவனுடன் செல்லும் போது அங்கு காணப்படும் இன்னல்களையும் ஒப்பிட்டுக் கூறப்படுகின்றன.

இயற்கை சூழலில் கருப்பொருள், உரிப்பொருளான வேங்கை மரம், காந்தல் பூ, உகாய்மரம், ஓமை மரம், இருப்பை மரம், ஆம்பல் மலர், பொதிய மலை, கருங்குவளை மலர், நொச்சிப்பூ, யானை, புலி, வெப்பமுடைய மலை, மாமரம், வேங்கை மரம், அசோக மரம், குழங்கு, மயில், குவலைப்பூ, மூங்கில், இலஞ்சி, நீர்நிலை, காட்டுமல்லிகைப்பூ, வந்தல் ஒருவகை மரம், புன்னை, குருகு, புலி, சென்னாய், சில்வீடு, வெர்தலை பருந்து இவை அனைத்தும் பாலை நிலத்தில் காணப்படுகின்ற இயற்கையாகும்.

உடன்போக்கிற்கு பின்பு தோழியின் வருத்தம், தலைவியை தலைவன் ஆற்றுப்படுத்தும் நிலை, தலைவியின் இயல்புநிலை, தோழி தலைவிக்கு அறிவுறுத்துதல், கண்டோர் கூறியது, தலைவி வருத்தம், தோழியின் நிலை தலைவனிடம் எடுத்துக்கூறுதல், செவிலியின் செயல்கள், செவிலியின் உணர்வுகள், செவிலியின் புலம்பல்கள், செவிலியின் வருத்தம், தெய்வத்திடம் முறையிடுதல், நற்றாய் நினைத்துப்பார்த்தல், நற்றாயின் வருத்தம், நற்றாயின் துயரம், நற்றாய் நிலைகண்டு காண்போர் சொல்லியது, உடன்போக்கு பின் தாயின் கணிப்பு, போன்றவை உடன்போக்கிற்கு பிறகு செவிலி நற்றாய், தோழி கண்டோர் இவர்களின் கூற்றுகளில் சங்க இலக்கிய அக நூல்களில் உடன்போக்கு பாடல்களை ஆராயப்படுகிறது.

**சங்க அக இலக்கிய நூல்களில் உடன்போக்கு**

சங்க அக இலக்கிய நூல்களாக பதினெண் மேற்கணக்கு நூல்களை குறிப்பிடுகின்றோம். இதில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களும் சங்க இலக்கிய அகநூலான நற்றினை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு போன்ற அகப்பாடல்களில் உடன்போக்கு பாடல்களை மட்டும் ஆராய்வதாகும். அவை.

**நற்றிணை**

நல் + திணை நற்றிணை — நல்ல ஒழுங்கலாறு என்று பொருள். அகநூல் — **400** பாடல்களைக் கொண்டது. கடவுள் வாழ்த்து திருமாலைப் பற்றியது. சிற்றெல்லலை ஒன்பது அடி முதல், பேரெல்லை பணிரெண்டு அடிகள் வரை காணப்படுகின்றன. இந்நூலுக்கு முதலில் உரை எழுதியவர் பினத்தூர் நாராயணசாமிஐயர் ஆவர். நல் என்ற அடைமொழிப் பெற்றதாக கூறுவர். இந்நூலில் உடன்போக்கு பாடலாக மொத்தம் **21** பாடல்கள் காணப்படுகின்றன. அவை

**1.**தலைவன் கூற்று — **9,162,202,264,362,384** — **6**

**2.**தலைவி கூற்று — **10,12,18** — **3**

**3.**கண்டோர் கூற்று — **2** — **1**

**4.**செவிலி கூற்று — **110,179,198** — **3**

**5.**நற்றாய் கூற்று — **26,66,143,184,271,279,293,303** — **8**

இந்நூலில் காணப்படக்கூடிய அனைத்து உடன்போக்கு பாடகல்களும் பாலைத்திணையைச் சார்ந்தவையாக காணப்படுகிறது. உடன்போக்கு அகப்பாடல்களில் இயற்கைச் சார்ந்த பேச்சுக்கள், அதனின் பின்புலம் போன்றவை ஆராயப்படுகின்றது.

**குறுந்தொகை**

நல்ல குறுந்தொகை என்ற அடைமொழிக்கு உரிய நூல். குறுகிய அடிகளை உடையதால் குறுந்தொகை எனப் பெயர் பெற்றது. குறுந்தொகை நானூறு என்று பெயர் பெறும். இந்நூல் **400** பாடல்களைக் கொண்டது. இந்நூலின் சிற்றெல்லை நான்கு அடி முதல், பேரெல்லை எட்டு அடிகள் வரை கொண்டது. இதில் **307, 399** இரண்டு பாடல்கள் மட்டும் **9** அடிகள் கொண்டதாக உள்ளது. கடவுள் வாழ்த்து முருகனைப் பற்றியது. தொகை நூல்களுள் முதலில் தொகுக்கப்பெற்ற நூல் குறுந்தொகை ஆகும். குறுந்தொகை நூல்களில் உடன்போக்கு பாடல்களாக **19** பாடல்கள் உள்ளன. அவை,

**1.**தலைவன் கூற்று — **36** - **1**

**2.**தலைவி கூற்று — **149** **-1**

**3.**தோழி கூற்று - **22,115,124,217,259,262,343,369,383,388** **-10**

**4.**கண்டோர் கூற்று - **1** - **1**

**5.**செவிலி கூற்று - **15, 84, 144, 356, 378, 396** - **6**

இந்நூலில் காணப்படுகின்ற உடன்போக்கு பாடல்கள் தோழி கூற்றில் காணப்படுகின்ற **( 22, 15, 217, 259 )** இந்த நான்கு பாடல்களும் குறிஞ்சித்திணையை சார்ந்தவை **15** பாடல்கள் பாலைத் திணையை சார்ந்தவை. உடன்போக்கில் காணப்படும் இயற்கைச் சூழலில் தலைவன், தலைவி செயல்பாடு உடன்போக்கில் ஏற்படும் இன்னல்கள் நிலத்தின் வருனணைகள் போன்றவை ஆராயப்படுகின்றன.

**ஐங்குறுநூறு**

ஐந்து புலவர்களால் தனித்தனி நூறு நூறு பாடல்களாக பாடுவித்து அவற்றை ஒழுங்கே தொகுத்து ஐங்குறுநூறு எனப் பெயர்பெற்றது. குறுகிய வடிவம் உடையது. **500** பாடல்களைக் கொண்டது. ஆசிரியப்பாவால் ஆனது. இந்நூலின் சிற்றெல்லை **3** அடி முதல் பேரெல்லை **6** அடிகள்வரைக் கொண்டது. இதன் கடவுள் வாழ்த்து சிவனைப் பற்றியது. ஐங்குறுநூறு அகப்பாடல்களில் உடன்போக்கு பாடல்களாக **45** பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவை,

**1.**தலைவன் கூற்று - **395, 396** - **2**

**2.**தலைவி கூற்று - **286, 312, 384, 385, 392, 397** - **6**

**3.**தோழிக்கூற்று - **200,235,236,254,280,303,364,398** - **8**

**4.**கண்டோர் கூற்று - **381, 383, 384, 390, 393** - **5**

**5.**செவிலிக்கூற்று - **380, 400** - **2**

**6.**நற்றாய்க்கூற்று - **313,314 315 371, 372, 373, 374, 375, 376, 377, 378, 379, 390 391,392 339 394, 395 395 397 398 399** - **22**

இவற்றில் **235, 236, 254, 280, 286** இந்த **5** பாடல்கள் குறிஞ்சித்திணையை சார்ந்தவையாகவும். **200**-வது ( **1** ) பாடல் நெய்தல்திணையை சார்ந்தவையாகவும் மற்ற **40** பாடல்களும் பாலைத்திணையை சார்ந்த உடன்போக்கு பாடல்களாக காணப்படுகின்றன.

**அகநானூறு**

**400** பாடல்களைக் கொண்டது. அகப்பாட்டு நெடுந்தொகை பெருந்தொகை நானூறு என வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இந்நூலின் சிற்றெல்லை **13** அடிகள் முதல் **31** அடி வரையறைக் கொண்டது. அகநானூற்றுப் பாடல்களில் மன்னர்கள், வள்ளல்கள், வரலாற்றுச்செய்திகள், இயற்கை வருணனை, உள்ளுறை, இறைச்சி முதலான செய்திகள் விரித்துரைக்க இடம் தந்து நிற்கின்றன.

**அகநானூறு வைப்பு முறை**

| | | | |
|---|---|---|---|
| **1-120** | களிற்றுயானை நிறை | - | **120** |
| **121-300** | மணிமிடைப்பவளம் | - | **180** |
| **301-400** | நித்திலக்கோவை | - | **100** |

| | | |
|---|---|---|
| **1,3,5,7,9** | - | பாலைத்திணை |
| **2,8,12,18** | - | குறிஞ்சித்திணை |
| **4,14,24,34** | - | முல்லைத்திணை |
| **6,16,26,36** | - | மருதத்திணை |
| **10,20,30,40** | - | நெய்தல் திணை |

இந்நூலில் உடன்போக்கு பாடல்களாக **35** பாடல்கள் காணப்படுகின்றன. அவை

| | | | |
|---|---|---|---|
| தலைவன் கூற்று | - | **99,257,339** | **- 3** |
| தலைவி கூற்று | - | **95** | **- 1** |
| தோழிக்கூற்று | - | **29,65,107,221,259,283,285** | **- 7** |
| செவிலிக்கூற்று | - | **7,17,49,117,145,153,189,203, 207,219,263,275,321,369, 383,385,397** | **-17** |
| நற்றாய்கூற்று | - | **15,35,55,105,195,315** | **— 6** |
| கண்டோர்கூற்று | - | **165** | **- 1** |

இவற்றில் களிற்றியாணை நிரையில் **13** பாடல்களும், மணிமிடைப்பவளம் இப்பாடல் பகுதியில் **15** பாடல்களும், நித்திலக்கோவையில் **7** பாடகல்களும் உடன்போக்கு பாடல்களாக இடம்பெற்றுள்ளன. உடன் போக்கு பாடகல்கள் அனைத்தும் பாலைத்திணையில் காணப்படுகின்றன

**கலித்தொகை**

கலித்தொகையில் மொத்தம் பாடல்களாக **150** பாடல்கள் ஆகும். கடவுள் வாழ்த்து பாடியவர் நல்ந்துவனார் ஆவர். பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்ற திணை வரிசையைக் கொண்டது. கலித்தொகையில் பாண்டிய மன்னர்களைத் தவிர மற்ற மன்னர்களின் குறிப்புகள் இல்லை. ஏறுதழுவுதல் பற்றி கூறும் அகநூல் கலித்தொகை ஆகும். உடன்போக்கு பாடல்களாக **1** பாடல் மட்டுமே இடம் பெறுகிறது. அவை,

**கண்டோர் கூற்று - 9 ம் பாடல்**

தலைவன், தலைவி பாலை நிலத்தின் வழியாக செல்லும்போது கண்டோர்கள் அவர்களை பார்த்து கூறும் காட்சிகளாக அமைகிறது. இவ்வாறாக சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு பாடல்களாக காணப்படுகின்றன. இப்பாடல்களை மட்டுமே எடுத்துக்கொண்டு உடன்போக்கிற்கு பின்புலத்தை ஆராயப்படுகிறது.

தலைவன் கூற்றில் உடன்போக்கு பாடல் தலைவனும், தலைவியும் உடன்போக்கில் செல்லும் போது தலைவிக்கு அவளுடைய வீட்டு ஞாபகம் வரக்கூடாது என்று பல்வேறு இயற்கைக் காட்சிகளையும் அவளை முன்னே நடக்கவிட்டு பின்னழகை ரசிப்பது, அவளை பற்றி ஒவ்வொன்றாக வர்ணனை செய்து அவளைப் புகழ்வது வீரச் செயல்களையும், செய்திகளையும், மலைகளின் அழகையும் பேசிக்கொண்டு செல்லும்போது

”கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை

அடுகளம் பாய்ந்த தொடிசிதை மருப்பிள்

பிடிமிடை களிற்றின் தோன்றும்

குறுநெடுந் துணைய குன்றமும் உடைத்தே”

காட்டு வழியில் செல்லும் குறுநெடும் குன்றத்தைத் தலைவியின் தந்தைக்குரிய போர் யானைகளோடு உவமை செய்து மகிழ்கிறாள். தாமரை பிரிந்த கன்னிடை உணர்வு தலைவிக்கு

ஏற்படாதவாறு அவள் நாட்டையும் தந்தையின் சிறப்பையும் நினைவுறுத்திக் கொண்டே தலைவியை அழைத்து வருகிறான். மேலும் பாலை நிலத்தின் கொடுமையைப் பற்றியும் தலைவியின் சூழல் பற்றியும், காட்டின் சிறப்புப் பற்றியும், தலைவனின் வீரம் பற்றியும், எடுத்துக் கூறிக்கொண்டே பாலை நிலத்தின் வழியே நடந்துச் செல்கிறார்கள். பாலை நிலத்தை அடைந்துச்செல்ல இக்காட்சிகளைக்கண்டு மகிழ்ந்து மெல்ல, மெல்ல நடந்து வருவாயாக என்று தலைவன் பேசிக்கொண்டே அழைத்துச்செல்கிறான்.

**தோழிக்கூற்றில் உடன்போக்கு பாடல்**

களவு வாழ்க்கைக்கு அச்சாணி பொருந்திய சக்கரம் போன்றவள் தோழி. அவளின் செயல்திறம் இல்லையென்றால் தலைவி தலைவனின் களவொழுக்கம் காணப்படாது. உடன்போக்கில் தோழி முழு உரிமை பெற்றவளாகிறாள். உடன்போக்கு மேற்கொள்ள தலைவனைத் தூண்டுதல், தலைவன் எண்ணத்தைத் தலைவியிடம் கூறித் துன்பத்தை பொறுக்கும்படி கூறுதல், தலைவியை உடன்பட செய்தல், தலைவன் தலைவியின் உடன் போக்கில் தோழியின் பங்கு முக்கிய இடம் பெற்று வருகிறது.

சங்க இலக்கியத்தின் தலைவி கூற்றினும் துணைப்பாத்திரமாக தோழிக் கூற்றை மிகுதியாக உள்ளமைக்கு சில காரணங்கள் கூறலாம். அகத்திணையில் தலைவியின் பண்புகளாக அச்சமும், நாணமும் காட்டப்படுகின்றன. அவை தன் களவொழுக்க செய்திகளையும் மெல்லிய காதல் உணர்வுகளையும் சொல்லால் வெளியிடுதல் நாகரிகமன்று ஆதலால் அவை தோழியின் கூற்றாக வெளிப்படுகிறது.

பகற்குறிக்குத் தடை ஏற்பட்டது. பகற்குறிக்கு வரும் இடப்பாடறிந்த தலைவன், தலைவியை இரவு நேரத்தில் சந்திக்க விழைந்தான். தன் உள்ளக் குறிப்பைத் தோழியிடம் கூறினாள். இறவுக்குறியும், பகற்குறியும் சந்திக்க முடியாத நிலையில் தோழி தலைவியை உடன்போக்கிற்கு விழைக்கிறாள்.அதனை

''தினைகிளி கடிகெனின், பகலும் ஒல்லும்

இரவுநீ வருதலின், ஊறும் அஞ்சுவல்,

யாங்கு செய் வாம் எனம் கரும்பை நோய்க்கு? என

ஆங்குயான் கூறிய அனைத்திற்குப் பிறிது செத்து

ஓங்குமலை நாடன் உயிர்த்தோன் மன்ற

ஐதே காமம் யானே

கழிமுதுக் குறைமையும் பழியும் என் றசினே''

இப்பாடலின் மூலம் தலைவியும், தலைவனும் இரவுக்குறி, பகற்குறி சந்திக்க இயலாமையின் காரணத்தால் தோழியானவள் தலைவியை உடன்போக்கிற்கு செல்ல வேண்டும் என்று தோழி அவர்களின் நிலைமைக் குறிப்பால் உணர்ந்த பிறகு உடன்போக்கிற்கு இசைகிறாள். இவ்வாறாக தோழியின் செயல்பாடுகள் காணப்படுகின்றன. தலைவியின் துன்பத்தை நீக்கும் ஒரே பாத்திரமாக தோழி அமைகிறாள். தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியை ஆற்றுவித்தல், அவளுடன் சிறுவயதிலிருந்தே பழகிவந்த தோழியை தவிர வேறு யாராலும் இயலாது.

**தலைவிக் கூற்றில் உடன்போக்கு பாடல்**

களவு வெளிப்பாட்டிற்குக் காரணமாக இருப்பது அம்பலும் அலரும் என்ற இரண்டும் ஆகும். அலர் வெளிப்படுவதற்கு முக்கிய காரணமாக இருப்பது தலைவியிடம் ஏற்படக் கூடிய மாற்றத்தின் விளைவாகும் தலைவியின் உடல் மெலிவு, தோழியருடன் விளையாடாமல் இருப்பது போன்ற செயல்களின் மூலமும், இற்செறிப்பு வேலன் வெறியாட்டு போன்றவற்றின் காரணமாக அலர் ஏற்படுகிறது. ( குறுந்தொகையில் )

"ஊஉர் அலரெழச் சேரி கல்லென
ஆனா தலைக்கும் அறனில் அன்னை
தானே இருக்கத் தன்மனை யானே
நெல்**லி** தின்ற முன்னையிறு தயங்க
உணவாய்ந் திசினல் அவரோடு சேய்நாட்டு
விண்தொட நிவந்த விலங்குமலைக் கவா அன்
கரும் புநடு பாத்தி யன்ன
பெருங்களிற் றடிவழி நிலை இய நீரே"

தலைவனுடன் வாழ்தல் அறமாகும், அதற்காக அவனுடன் செல்லுதலே நல்லது. அறத்தை அறியத் தவறினால் அன்னையானவள் கடிந்து கூறி தலைவியின் வாழ்வுக்கு வழிவகுக்கும் உள்ளத் துணிவே தேர்ந்தெடுப்பாள். நற்றாய் செவிலி முதலியோர் காதலை மறுத்து இந்நெறித்தமையால் அவர் மீது தலைவிக்கு வெறுப்பு உண்டாயிற்று. ஆனால் தலைவியானவள் தலைவனுடன் உடன்போக்கிற்கு உடன்படுகிறாள்.

தலைவிக்கு உடல் மெலியுற பசலை நோய் உண்டாக துன்பம் பலரும் அறியுமாறு இருப்பதால் அன்னையும் களவு வாழ்க்கை தருபவளாக இருப்பதால் தலைவிக்கு அலரும், அச்சமும் காணப்படுகிறது. தீய சொற்களால் பிறரை குறை கூறுவதையே இயல்பாகக் கொண்ட பெண்கள் சிலர் அலர் தூற்றுவதற்கு காரணமாக உள்ளனர். இதன் காரணமாக தலைவி தலைவனுடன் உடன்போக்கு செல்கிறாள்.

**செவிலிக் கூற்றில் உடன்போக்கு பாடல்**

சங்க இலக்கிய அகப்பாடல்களில் உடன்போக்கு போது செவிலியின் மன உணர்வுகள், புலம்பல்கள், செயல்கள் போன்றவை அறியமுடிகிறது. தலைவியின் மனம் உடன்போக்கிற்கு எப்படி துணிந்து சென்றாள். அவளின் மனம் எவ்வாறு திண்மையானது. தலைவி தலைவனின் பெருமைகளை நினைக்கும் இடங்களில் செவிலிக் கூற்று நிகழும். செவிலி புலம்புவதாக உடன்போக்கு காலத்தில் செவிலிக் கூற்றுகள் சங்கப் பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதை பற்றி விரிவாக காண்போம்.

தலைவி உடன்போக்கில் சென்றதை தோழியின் மூலம் அறிந்த செவிலி புலம்புவதாக சில பாடல்கள் காணப்படுகின்றன. தன் மகளை பற்றி ஊரில் எழுந்த அலரைக் கண்டு செவிலி புலம்புவதை இப்பாடலில் காண்போம்.

"கிளியும் பந்துங் கழங்கும் வெய்யோள்

அளியும் அன்புந் சாயலும் இயல்பும்

முன்னனாம் போலாள் இற்இயசென் உயிரெனக்

....... குறுக வந்து குவவுறுதல் நீவு

மெல்லெனத் தமீஇய**லி**னே னாக என்மகள்

நன்ன ராகதி நிடைமுலை வியர்பப்

பல்கால் முயங்கினள் மன்னே அன்னோ

......... காருடன் கழிதல் அறியின் .......

ஆடுவழி யாடுவழி அகலேன் மன்னே”

பொற்கிணத்தில் இனிய பாலை தேனுடன் கலந்து கொடுத்தாலும் குடிக்காதவள் பாலை நிலத்தின் வழியே யானை கலக்கிய நீரை எவ்வாறு குடித்தாலோ மனையின் கண் ஏவிய வேலைகளைச் செய்ய பணியாட்கள் உள்ளனர். செல்வ வளமிக்க தலைவி பாலைநிலத்தில் வழியே கற்குவியல்கள் நிறைந்த காட்டுப்பகுதியில் மெல்லிய பாதத்தினால் நடந்து சென்றாளோ என செவிலி புலம்பினாள்.

உடன்போக்கில் சென்ற தலைவியை தேடிக்கொண்டு செவிலித்தாய் பாலை நிலத்தின் வழியே செல்கிறாள். அப்போது பல காதலர்கள் வழியில் அவள் முன் தென்படுகின்றனர் ஆனால் அவளது மகளும் தலைவனும் தென்படவில்லை தேடித்தேடி கால்கள் ஓய்ந்துவிட்டன, கண்கள் பார்த்து பார்த்து பூத்துவிட்டன. இருவரையும் காணவில்லை என்று செவிலித்தாய் புலம்புவதாக பாடல்கள் காணப்படுகின்றன. இவ்வாறாக உடன்போக்கு பாடல் மூலம் செவிலி புலம்புவதையும், தலைவியின் வளமான சூழலையும் இப்பாடல் மூலம் அறியமுடிகிறது.

**நற்றாய் கூற்றில் உடன்போக்கு பாடல்**

தலைவியின் தாயானவள் நற்றாய். தலைவி உடன்போக்கு சென்றதால் தாய் வருத்தப்பட்டு ஒவ்வொருவரிடமும் புலம்புவதாகவும், தலைவி சென்ற பிறகு, அவளின் நினைவுகளை நினைத்துப் பார்த்தல் விதமாக.

1. நிமித்தம் பார்த்தல்
2. சுரம் தணிவித்தல்
3. தன் மகளின் மென்மை தன்மையை நினைத்தல்
4. இளமை தன்மை நினைத்தல்
5. அச்சத்தன்மைக்கு இரங்கல்

இவை ஐந்தும் தலைவி உடன்போக்கு சென்ற பிறகு அவளை நினைத்து நற்றாய் வீட்டில் இருந்தபடியே வருந்துதல். இதன் மூலம் நற்றாய் உணர்வுகளை அறிய முடிகிறது. உடன்போக்கு காலத்தில் நற்றாய் கூற்றுகள் சங்க அகப்பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதை பற்றி விரிவாக காணலாம்.

தலைவியின் குழந்தைப் பருவ விளையாட்டுகளும், பேதமை செயல்களும் நினைத்து பார்கிறாள். பந்தும், கழங்கும், பாவையும் அவளது விளையாட்டுப் பொருட்கள். பூவையும், கிள்ளையும் அவளது வளர்ப்பு பறவைகள். தாழியில் வயலைக் கொடிக்கும் நீரூற்றி வளர்ப்பவள்

அவள். ஆயத்துடன் பந்து விளையாடி பூக்கொய்தும் கடலாடியும் பொய்தலாடியும் விளையாடுபவள் அவள்.

"ஒங்கு நிலைத் தாழி மல்கச் சார்ந்த்திக்

குடையடை நீரின் மடையினள் எடுத்த

பந்தர் வயலைப் பந்தெறிந் தாடி

இளைமத் தகைமையை வாளமனைக் கிழத்தி

பிதிர்வை சீரை பெண்ணீறு ஆகென

யார்ந்தள் கழறுங் காலைத் தன்றன்

மழலை இன்சொற் கழறள் இன்றி"

தாழியில் வளர்த்த வயலைக் கொடிக்கு நீருற்றியும் பந்தெறிந்தாடியும் வீட்டில் விளையபாட்டுப் பிள்ளையாக உறைந்த தன் மகளை நினைக்கிறாள். தாய் நொச்சியின் கீழ் அவள் விரித்த வண்டலைக் காட்டி கலுழ்கிறாள். தினமும் மகள் நீருற்றி வளர்த்ததை நினைக்கிறாள். வெப்பம் மிகுந்த பாலை நிலத்தின் வழியே கூர்மையான கற்கள் துன்புறுத்தி அதையும் பொருட்படுத்தாத தலைவி உடன்போக்கில் சென்றுவிட்டால் என் மனம் அவளை நினைத்து வேகின்றது. சங்க அகப்பாடல் மூலம் நற்றாய் வீட்டில் இருந்தபடியே வருந்துவதும் அவளை நினைத்து பார்க்கக்கூடியவளாக நற்றாய் காணப்படுகிறாள். உடன்போக்கு பாடல் மூலம் இச்செய்திகளை அறியமுடிகிறது.

**கண்டோர் கூற்றில் உடன்போக்கு பாடல்**

தலைவி தலைவனுடன் பாலை நில வழியே உடன்போக்கு சென்றுவிட்டாள். இதனையறிந்த செவிலித்தாய் தன் மகளை தேடிக்கொண்டு பாலை நிலத்தின் வழியே செல்கிறாள். அப்போது அங்கு வரும் அந்தணர்களையும், கண்டோர்களையும் அந்த பாலை நிலத்தின் வழியே எனது மகளும் காளை போன்ற தலைமகனும் உடன்போக்கில் சென்றார்களா? என்று வினவ அதற்கு அவர்கள் இருவரும் சென்றார்கள் என்று கூறுவதாக சங்க இலக்கிய அகப்பாடல்களில் கண்டோர் கூற்றில் உடன்போக்கு பாடல்களில்

"பல உறுநறுஞ் சாந்தம் படுப்பவர்க்கு அல்லகை,

மலையிலே பிறப்பினும், மலைக்கு அவைதாம் என் செய்யும்?

நினையுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையலே

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லகை

நீருளே பிறப்பினும், நீர்க்கு அவைதாம் என் செய்யும்

தேருங்கால் நும்மகள் நுமக்கு ஆங்கு அனையளே

ஏழ்புணர் இன் இறை முரல்பவர்க்கு அல்லகை,

யாழுளே பிறப்பினும், யாழ்க்கு அவைதாம் என்செய்யும்?

சூழங் கால், நும் மகள் நுமக்கு ஆங்கு அனையளே"

அதற்கு கண்டோர்கள், அவளைக் கண்டோர்கள் அவள் விரும்பிய தலைவனுடன் மலை கடந்து சென்றுவிட்டாள். நீ சென்றாலும் பலனில்லை என்று கூறுகின்றனர். மேலும் மணம் மிக்க சந்தனம் மலையில் பிறந்தாலும் அதற்கு சொந்தமில்லை. அதனை பூசிக்கொள்பவர்களுக்குத்தான் சொந்தம். முத்து கடலில் பிறந்தாலும் அது கடலுக்குச் சொந்தமில்லை. அதை விரும்பி வாங்குபவர்களுக்கே சொந்தம். வீணையில் இருந்து வரும் இசை வீணைக்குச் சொந்தமில்லை. அதை கேட்பவர்க்கே உரிமை. அதுபோல உன் மகள் பிறந்த வீட்டிற்கு சொந்தமில்லை அவளை விரும்பி கற்பு மணம் புரிந்தவனுக்குத்தான் சொந்தம். என்று கண்டோர்கள் செவிலித்;தாயிடம் கூறி அவளை மீண்டும் வீட்டிற்கு அனுப்பினார்கள். இவ்வாறாக கண்டோர் கூற்று உடன்போக்கு பாடல்மூலமாக தெரிவிக்கின்றன.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் பெண்கள் களவு வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது தெரிகிறது. அறநெறியைப் பின்பற்றி வாழ்ந்த செய்தியும் அறியமுடிகிறது. தனக்கு பிடித்தவன் ஏழ்மையானவனாக இருந்தாலும் அவ**ü**னுடைய தகுதிக்கு இறங்கி தலைவி சென்றதை அறியமுடிகிறது. தலைவி பிறந்த வீட்டில் இருக்கும்போது செல்வ செழிப்புடன் வளமாக காணப்படுகிறாள். ஆனால் தலைவனுடன் உடன்போக்கில் சென்று பின்னர் பாலை நிலத்தின் வெம்மையையும் தாங்காதவளாகவும் தலைவனின் வீட்டில் துன்பம் படுபவளாகவும் இருக்கின்றாள்.

சங்க காலத்தில் தலைவி தலைவனுடன் உடன்போக்கு சென்றபோது தோழியின் வருத்தம் செயல்பாடுகள், உணர்வுகள் அறிய முடிகிறது. செவிலித்தாயின் உணர்வுகள், புலம்பல்கள் காணப்படுகிறது. நற்றாய் வீட்டில் இருந்தபடியே நினைத்து பார்த்து வருந்துபவர்களாக உடன்போக்கு பாடல்கள் மூலம் அறியமுடிகிறது. தற்காலத்தில் உடன்போக்கு என்றபது ஓடிப்போவது என்று தவறான எண்ணமாக கொண்டுள்ளனர். நற்றாய், செவிலி, தோழி, தலைவன், தலைவி கண்டார் — இக்கதை மாந்தர்கள் உலக வழங்கில் காணப்படுபவர்கள் போலவே சங்க காலத்தில் படைக்கப்பட்டுள்ளனர் என்று உடன்போக்கு பாடல்கள் மூலம் அறியமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**


**1.**ச.வே சுப்பிரமணியன் - நற்றிணை மூலமும் உரையும், 31 சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை — 600001

**2.**ச.வே சுப்பிரமணியன் - குறுந்தொகை மூலமும் உரையும், 31 சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை — 600001

**3.**ச.வே சுப்பிரமணியன் - அகநானூறு மூலமும் உரையும், 31 சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை — 600001

**4.**ச.வே சுப்பிரமணியன் - ஐங்குநுறுறு மூலமும் உரையும், 31 சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை — 600001

**5.**ச.வே சுப்பிரமணியன் - கலித்தொகை மூலமும் உரையும், 31 சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை — 600001

**6.**ந. சுப்புரெட்டியார் - அகத்திணைக் கொள்கைகள், பாரிநிலையம், 184, பிராட்வே , சென்னை — 600001.

**7.**கோ. சுகன்யா - குறுந்தொகையில் இலக்கிய மரபுகள்

***Bibliography***

1. *S.V. Subramanian - Natrinai Moolam and Text, 31 Singer Street, Parimunai, Chennai — 600001*

2. *S.V. Subramanian - Kurunthokai Moolam and Text, 31 Singer Street, Parimunai, Chennai — 600001*

3. *S.V. Subramanian - Akananuru Moolam and Text, 31 Singer Street, Parimunai, Chennai — 600001*

4. *S.V. Subramanian - Aingunuru Moolam and Text, 31 Singer Street, Parimunai, Chennai — 600001*

5. *S.V. Subramanian - Kalithokai Moolam and Text, 31 Singer Street, Parimunai, Chennai — 600001*

6. *N. Subpurediyar - Internal Principles, Parinilayam, 184, Broadway, Chennai — 600001.*

7. *Ko. Sukanya - Literary Traditions in Kurunthokai*

ARAN International e-Journal of Tamil Research
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com